**08.01.2021 அ.வ.எண். 165/2008 வா.சா.1 துரைக்கண்ணு**

**குறுக்கு விசாரணை**

எனது வயது 62 ஆகும். நான் சீதாராமன் ரைஸ்மில் தெருவில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து நான் குடியிருக்கும் தெருவிலிருந்து 3 தெருக்கள் தள்ளி அமைந்துள்ளது. தாவா சொத்து சர்வே எண். 214/6ஏ ல் உள்ள நிலங்கள் அனைத்தும் ஆதியில் பத்ரி ஐயர் மற்றும் அவரது சகோதரர் ராமசப்பையர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டிருந்து என்றால் சரிதான். எனது தந்தை வேணுகவுண்டர் 15 வருடங்களுக்கு முன்பு இறந்துபோனார். 1958ம் வருடம் நான் பிறந்தேன். 23.09.1972 அன்று அடமானப்பத்திரம் ஏற்பட்ட சமயத்தில் நான் சிறுவனாக இருந்தேன் என்றால் சரிதான். பத்திரம் பதிவு செய்யப்பட்டபோது நான் செல்லவில்லை. ஆவணம் எழுதியதை குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். நான் சீதாராமன் ரைஸ்மில் தெருவில் குடியிருக்கும வீட்டு மனை எனது தாயார் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். எனக்கு திருமணமான பின்பு, நான் மருதாடு கிராமத்தில் குடியிருக்கவில்லை. அமுலூர் கிராமத்தில் வசித்து வந்தேன். இவ்வழக்கு தாக்கல் செய்தபோது சாய்கிருஷ்ணன் என்பவர் உயிருடன் இருந்தார். பத்ரி ஐயர் மற்றும் அவரது மகன் சாய்கிருஷ்ணன் ஆகியோருக்கு சர்வே எண். 214/6ஏ மன்றும் அதன் கிழக்கே அமைந்துள்ள சர்வே எண். 214/10 நிலங்களும் அவர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். வந்தவாசி மருவத்தூர் சாலையில் இருந்து சர்வே எண். 214/6ஏ நிலத்தின் வழியாக சர்வே எண். 214/10ல் உள்ள நிலங்களுக்கு செல்ல தனியாக கிழக்கு நோக்கி பாதை ஒன்று அமைத்திருந்தனர் என்றால் சரிதான். சர்வே எண். 214/6ஏல் உள்ள நிலத்திலிருந்து சர்வே எண். 214/10ல் உள்ள நிலம் வரை கிழக்கு மேற்கு அளவு சுமார் 200 அடி என்றால் சரிதான். பத்ரி வெங்கட்நாராயண ஐயர் உயிருடன் இருந்த சமயத்தில் அந்த வழிப்பாதைக்கு வடக்கு பகுதியில் அமைந்துள்ள நிலங்களை வீட்டு மனைகளாக பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான். வா.சா.1ல் உள்ள போகியம் பைசல் செய்யப்பட்ட பின்புதான் 20.09.1996 அன்று கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. வா.சா.1 ஆவணப்படி 15 சென்ட் நிலம் போகியத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.1ல் மேற்சொன்ன 15 சென்ட் நிலம் குப்பை கொட்டி அனுபவித்து வருவதற்காக கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.1 வீடு கட்டி அனுபவித்து வருவதற்காக கொடுக்கப்பட்டதாக குறிப்பாக வாசகம் ஏதும் இல்லை என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக விவசாய நிலங்கள் ஏதும் கிடையாது. ஆடு, மாடுகள் சொந்தமாக இருந்து வந்தது. ஆடு மாடுகளை சீதாராமன் ரைஸ்மில் தெருவில் உள்ள எனது வீட்டில் கொட்டகை அமைத்து பராமரித்து வந்தோம். ஆடு மாடுகளின் கழிவுகளை போகியம் மூலம் பெற்ற 15 சென்ட் நிலத்தில் கொட்டி வந்தோம் என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் மூலம் எனது தன்தைக்கு பாகமாக வந்த சொத்துக்களை விற்பனை செய்துவிட்டோம். சீதாராமன் ரைஸ்மில் தெருவில் வீட்டு மனைகள் வாங்கி கூரை வீடு அமைத்து வாழ்ந்து வந்தோம். அந்த கூரை வீடு எரிந்துபோனபின்பு காலி மனையாக உள்ளது. நான் தற்போது அமுலூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனது தாயார் வயது

முதிர்ந்து இருந்த காலத்தில் அவரை நான் அமுலூர் கிராமத்தில் வைத்து பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு திருமணமான பின்பு நான் அமுலூர் கிராமத்தில்தான் இன்று வரை வசித்து வருகிறேன். அவ்வாறு 35 ஆண்டுகள் அங்கு வசித்து வருகிறேன். வா.சா.2ல் உள்ள கிரைய ஒப்பந்தம் 15 நிலம் சம்மந்தமாக ஏற்பட்டதாகும். வா.சா.2ல் 15 சென்ட் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது. சாலையில் இருந்து அந்த 15 சென்ட் நிலம் குறிப்பாக எந்த இடத்தில ஆரம்பித்து எங்கு முடிவடைந்து இருந்து வருகிறது என்று எனக்கு தெரியாது. அதன் கிழக்கு மேற்கு மற்றும்வடக்கு தெற்கு அளவுகள் எனக்கு தெரியாது. வா.சா.2ல் உள்ள கிரைய ஒப்பந்தத்தை நான் படித்துப் பார்த்துள்ளேன். பத்ரி நாராய ஐயர் இறப்பிற்கு பின்பு அவர் மகன் சாய்கிருஷ்ணன் வேறு நபர்களுக்கு 15 சென்ட் நிலத்திற்கு உட்பட்ட நிலங்களை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சாய்கிருஷ்ணன் என்பரிடமிருந்து கிரையம் பெற்ற இடத்தில் திருமணமண்டபம் கட்டடியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு அந்த திருமண மண்டபம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 2ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதி சாய்கிருஷ்ணனிடமிருந்து கிரையம் பெற்ற நிலத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். அவ்வாறு கிரையம் பெற்ற மனைகளை 1ம் பிரதிவாதி இந்நாள் வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.2ல் உள்ள கிரைய ஒப்பந்தத்தின் படி சாய்கிருஷ்ணன் என்பவரை கிரையம் செய்துகொடுக்க உத்தரவிடுமாறு கோரி வழக்கு எதையும' நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.2ன் படி மொத்த கிரையத்தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. கிரய ஒப்பந்தத்தின் ப டி 15 சென்ட் நிலத்தை கிரையம் கொடுக்கஉள்ளதாக பத்ரி நாராயண ஐயர் மற்றும அவரது மகன் சாய்கிருஷ்ணன் ஆகியோர் கூறியதன் பேரில் எனக்க தெரிய வந்தது. வா.சா.2ல் உள்ள கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட சமயத்தில் பத்ரி நாராயண ஐயர் உயிருடன் இருந்தார்ன. அந்த கிரய ஒப்பந்தத்தில் பத்ரி நாராயண ஐயர் கையொப்பம் இட்டுள்ளார். அந்த கிரய ஒப்பநத்ம் ஏற்பட்ட சமயத்தில' நான் இல்லை. குறிப்பாக கிரய ஒப்பந்தம் யாரால் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றும் முன்பணம் மற்றும் கிரய தொகை எவ்வளவு நிர்ணயம் செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதை நிர்ணயிக்கும் பொது அந்த ஒப்பந்தத்தில் சாட்சியாக கையொப்பம் இட்ட நபர்கள் மற்றும ஆவணத்தை எழுதிய நபர் ஆகியோரை நான் சாட்சிகளா விசாரிக்க தயாராக உள்ளேன். இந்த வழக்கை என் தாயார் தாக்கல் செய்ய சென்றபோது எனது தாயாருடன் சென்றேன். எனவே இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது)